

கோவை பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் விற்றது தொடர்பான தகவல்களைத் தந்ததால் அடித்துக் கொலை செய்யப்பட்ட அமுதனின் வீட்டுக்கு, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சங்கராபுரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் நிர்வாகிகளுடன் நேரில் சென்று அமுதனின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி, ரூ.2 லட்சம் நிவாரணத் தொகை வழங்கியதுடன், அவரது இரண்டாவது மகனின் முழு கல்விச் செலவையும் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து குடும்பத்திற்குத் தேவையான உதவிகளையும் தி.மு.கழகம் செய்யும் என்றும் உறுதியளித்தார். அப்போது அங்கையற்கண்ணி, பன்னீர்செல்வம், அன்பு மணிமாறன், ஜெயவேல், ஆகியோர் உடன் இருந்தனர்.

### கோவையில் – படுகொலை செய்யப்பட்ட

# மாணவனின் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ.2 லட்சம் நிதிஉதவி!

## வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் நேரில் ஆறுதல்!

கள்ளக்குறிச்சி, ஆக.15-

கோவை தனியார் பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் விற்றது தொடர்பான தகவல்களை தந்ததால் அடித்து கொலை செய்யப்பட்ட அமுதனின் வீட்டுக்கு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தா.உதய சூரியன் நேற்று முன்தினம் ஆகஸ்ட் 13 வியாழக்கிழமை அன்று நிர்வாகிகளுடன் வீடு தேடி சென்று ரூ.2 லட் சம் நிதி உதவி வழங்கி ஆறு தல் கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட் டம், வடக்கனந்தல் பேரூ ராட்சிக்கு உட்பட்ட அம் பேத்கர் நகர் பகுதியை சேர்ந்தவர் கென்னடி, இவர் அரசு பள்ளியில் ஆசிரிய ராக பணிபுரிந்து வருகிறார், இவருடைய மனைவி சுமதி, இவர்களுக்கு சார் லஸ், அமுதன் என்ற இரு மகன்கள் உள்ளனர், இதில் அமுதன் கோவையில் உள்ள தனியார் பொறியி யல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். இந்த நிலையில் ஆகஸ்ட் 10 அன்று கோவையில் சில மாணவர்கள் ஒன்று சேர்ந்து அமுதன்மீது கொலை வெறி தாக்குதல் நடத்தியதில் அவர் இறந்துவிட்டார், இறந்து போன மாணவன் அமுதனின் உடல் கடந்த புதன்கிழமை அன்று சொந்த ஊரான வடக்கனந்தல் பகுதியில் அடக்கம் செய் யப்பட்டது, இந்த மாணவ னின் இறப்புக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று சட்ட சபையில் உத யநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்,

இந்த நிலையில் இதுகு றித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணி செயலா ளர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர், கொறடா எ.வ.வேலு ஆகி யோரின் உத்தரவின் பேரில், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரி யன் நிர்வாகிகளுடன் நேரில் சென்று அமுதனின் பெற்றோருக்கு ஆறுதல் கூறி தி.மு.க. சார்பில் ரூ.2 லட்சம் நிவாரணத் தொகை யையும் வழங்கியதுடன் இரண்டாவது மகனின் முழு கல்வி செலவையும் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளையும் தி.மு.க. செய்யும் என்றும் உறுதி கூறினார்.

அப்பொழுது அவரிடம் பெற்றோர்கள் தனது மக னின் இறப்புக்கு தக்க நீதி கிடைக்க வேண்டும் அதற்கு உதயநிதி சார் உதவிட வேண்டும் அவரால் மட் டும் தான் அது முடியும் என்று கண்ணீருடன் வேண் டுகோளையும் வைத்தனர். இந்த நிகழ்வின் போது வடக்கனந்தல் பேரூராட்சி மன்ற தலைவர் பன்னீர் செல்வம், மாநில மகளிர் அணி துணை செயலாளர் அங்கையற்கண்ணி, சின்ன சேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அன்பு மணிமாறன், பேரூர் கழக செயலாளர் ஜெயவேல் உள் ளிட்ட நிர்வாகிகள் தொண் டர்கள் பலர் உடனிருந்த னர்.

### மாநிலங்களுக்கான வரிப்பகிர்வில்

# தமிழ்நாட்டுக்கு ஒன்றிய நிதி வரிப் பகிர்வு அதிகரித்துள்ளது!

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!



புதுடெல்லி, ஆக.15-

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வு குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவரு மான கனிமொழி கருணா நிதி சில கேள்விகளை மக்களவையில் எழுப்பினார்.

"நம் நாட்டின் பொருளாதா ரத்துக்கும் மற்றும் நேரடி வரி வசூலுக்கும் அதிக பங்க ளிப்பை வழங்கும் மாநிலங்க ளில் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்தபோதிலும், மாநிலங் களுக்கான வரிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு குறைந்து வருகிறது.

மேலும் தமிழ்நாட்டுக் கான தனிநபர் அடிப்படையி லான மத்திய நிதிப் பரிமாற் றங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கிறது. இது குறித்தெல்லாம் ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள், மானியங் கள், பேரிடர் நிவாரண உதவி கள் அல்லது வேறு ஏதேனும் நிதிப் பரிமாற்றங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப் பட்ட நிதியில் ஏதேனும் தற் போது விடுவிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதா? அப் படி நிலுவையில் இருந்தால் எந்த வகையில், எந்தெந்த ஆண்டில் எவ்வளவு நிலுவை யில் இருக்கிறது என்ற விவ ரங்கள் தேவை.

நிலுவையில் இருப்பதற் கான காரணங்கள் என்ன? நிலுவையில் உள்ள நிதியை மாநில அரசுக்கு விடுவிக்க காலக்கெடு ஏதும் ஒன்றிய அரசால் உத்தேசிக்கப் பட்டுள்ளதா?

தற்போதைய நிதிக் குழு வின் நிதிப் பகிர்வு அளவு கோல்கள் மக்கள் தொகை சார்ந்த குறியீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாக வும், இதனால் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்திய மற்றும் சிறந்த பொருளாதாரச் செயல் பாடு கொண்ட மாநிலங்க ளின் நிதிப் பங்கு குறைவதாக வும் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் எழுப்பியுள்ள கவலைகளை அரசு ஆய்வு செய்துள்ளதா?

மத்திய பட்ஜெட் ஒதுக்கீடு கள் மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங் களுக்கான நிதி ஒதுக்கீடு ஆகி யவற்றை நிர்வகிக்கும் தற் போதைய அளவுகோல் களை மறுஆய்வு செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

ஆகிய கேள்விகளை எழுத்துபூர்வமாக கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பி னார்

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய நிதித் துறை இணை யமைச்சர் பங்கஜ் சௌத்ரி அளித்த பதிலில்,

"ஒன்றிய அரசின் சார்பில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு குறையவில்லை. மாறாக உயர்ந்திருக்கிறது.

15-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத்தில் (2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டு கள்) 4.079% ஆக இருந்த தமிழ்நாட்டிற்கான வரிப் பகிர்வு விகிதம், 16-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத் தில் (2026-27 முதல் 2030-31 வரையிலான நிதி யாண்டுகள்) 4.097% ஆக உயர்ந்துள்ளது. அதாவது 0. 018% உயர்ந்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டிற் கான தனிநபர் அடிப்படையி லான மத்திய அரசின் நிதிப் பரிமாற்றங்கள் (வரிப் பகிர்வு, மத்திய நிதியுதவித் திட்டங்கள் (CSS), நிதிக் குழு மானியங் கள் மற்றும் SASCI ஆகி யவை உட்பட) 2021-22 நிதியாண்டில் சுமார் 9,500 ரூபாயாக இருந்தது. இது 2025-26 நிதியாண்டில் சுமார் 11,600 ரூபாயாக அதி கரித்துள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங் களின் (CSS) கீழ் நிதி அனுமதி மற்றும் விடுவிப்பு ஆகியவை, அத்திட்டங்களைச் செயல்ப டுத்தும் ஒன்றிய அரசின் அமைச்சகங்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய நிதி விடுவிப்பு கள், திட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் பொது நிதி விதிகள் (GFR) 2017 ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின் றன. மேலும், 'SNA SPARSH' முறை அறிமுகப்படுத்தப்பட்ட தைத் தொடர்ந்து, இத்திட்டங் களில் இணைக்கப்பட்ட ஒன் றிய நிதியுதவித் திட்டங்களுக் கான நிதி விடுவிப்பானது, மாநிலங்களின் உண்மை யான செலவினங்களின் அடிப்படையில் நிகழ்நேர (real-time) அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

நிதிக் குழுவால் பரிந்து ரைக்கப்பட்ட நிபந்தனையற்ற மானியங்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கால அட்ட வணையின்படி விடுவிக்கப் படுகின்றன; அதேவேளை யில், செயல்திறன் சார்ந்த மானியங்கள் (நிபந்தனைக் குட்பட்ட மானியங்கள்) நிர் ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய் யப்படுவதன் அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக, 2021-22 முதல் 2025-26 வரை யிலான காலகட்டத்தில், தமிழ்நாட்டிற்கு மத்திய நிதியு தவித் திட்டங்களின் (CSS) கீழ் 1,11,904 கோடி ரூபாயும், நிதிக் குழு மானியங்களின் கீழ் 34,513 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளன.

15-வது நிதிக் குழுவின் பரிந்துரைக் காலத்தில் (2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டு கள்) 15.800% ஆக இருந்த தென்னிந்திய மாநிலங்களின் (ஆந்திரப் பிரதேசம், தெலங் கானா, கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா) பங்கு, 16-வது நிதிக் குழுவின் பரிந் துரைக் காலத்தில் (2026-27 முதல் 2030-31 வரையி லான நிதியாண்டுகள்) மத்திய வரிகள் மற்றும் தீர் வைகளின் நிகர வருவாயில் 17.001% ஆக அதிகரித் துள்ளது.

ஒன்றிய அரசு அவ்வப் போது திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை மறுஆய்வு செய்கிறது. எந்தவொரு நிதி யாண்டிலும் ஒன்றிய அர சின் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் ஒதுக்கீடுகள் மற்றும் ஒன்றிய அரசால் நிதியுதவி அளிக்கப்ப டும் திட்டங்களுக்கான ஒதுக் கீடுகள் ஆகியவை நிதி அமைச்சகம் மேற்கொள்ளும் விரிவான இடைக்கால மறு ஆய்வின் அடிப்படையில் அமைகின்றன" என்று குறிப் பிட்டுள்ளார்.

### நூறு மடங்கு சொத்து வரி உயர்வு

# சென்னை மக்கள் தலையில் பேரிடி!

## முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம்!



சென்னை, ஆக. 15-

நூறு மடங்கு சொத்து வரி உயர்வு என்றும் சென்னை மக்கள் தலை யில் பேரிடி என்றும் முன் னாள் அமைச்சர் மா.சுப்பி ரமணியன் கண்டன அறிக்கை வெளியிட்டுள் ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கடந்த சில நாட்களா கவே சென்னையில் மக் கள் பரபரப்பாக பேசிக் கொண்டிருக்கிற ஒரு செய்தி சொத்து வரி உயர்வு. சென்னை மாநக ராட்சியின் சார்பில் சொத்து வரியினை எப் போதாவது ஒருமுறை உயர்த்துவது என்பது வாடிக்கைதான். ஆனால் இந்த அளவுக்கு மக்கள் தலையில் பேரிடியாக அது இருக்காது. ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் மதிப்பீட்டில் இருந்து ஐந்து அல்லது பத்து சதவீ தம் உயர்வு என்பது இருக் கத்தான் செய்யும்.

ஆனால் தற்போதைய உயர்வு என்பது ஒரு சில இடங்களில் நூற்றுக்கு நூறு சதவீதமும் ஒரு சில இடங்களில் நூற்றுக்கு 300 சதவீதம் அளவிற்கு சொத்து வரி உயர்த்தப்பட் டிருக்கிறது. எந்த ஒரு முன் னறிவிப்பு இன்றி இப்படி எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற வகையில் சொத்து வரி உயர்த்தி இருப்பது என்பது மக்களுக்கு மிகப் பெரிய இன்னலை ஏற்ப டுத்தி இருக்கிறது.

இந்த நிலை எப்படி உரு வானது என்ற காரணம் கேட்டால் அரசு தரப்பில் ஒரு வகையான பதில் தரப் படுகிறது. அதாவது வரி மதிப்பீடுகள் என்பது பரப் பளவை விட குறைவாக மதிப்பிடப்பட்ட குடியி ருப்புகள் மாநகராட்சி அலுவலர்களால் கண்டறி யப்பட்டு அதன் அடிப்ப டையில் ஆய்வு செய்யப் பட்டு இந்த வரிகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது என்றும், குடியிருப்பு வகைப்பாட்டில் சொத்து வரி செலுத்தி விட்டு அதனை வணிகப் பயன் பாட்டிற்கு பயன்படுத்தி வருகிற உரிமையாளர்க ளுக்கு சொத்து வரி உயர்த் தப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பு கூறுகிறது.

ஆட்சிக்கு வந்து மூன்று மாத காலத்தில் இதை இவர்கள் எப்படி கண்ட றிந்திருக்கக்கூடும் என்பது பொதுமக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ள ஒரு கேள்வி. ஏற்கனவே மின் சார கட்டணம் பல மடங்கு உயர்ந்த நிலை யில் சொத்துவரி உயர்த்தி யிருப்பது என்பது ஏற்பு டையதாக இல்லை என்று பொதுமக்கள் இதற்கு தங் கள் எதிர்ப்பத் தெரிவிக்கி றார்கள்.

சொத்து வரி உயர்த்த வேண்டும் என்று சொன் னால் அதற்கென்று முறை யான வழிமுறைகள் இருக் கிறது. வழக்கமாக மாநகராட்சி மன்ற கூட் டத்தில் மாமன்ற உறுப்பி னர்களால் விவாதிக்கப் பட்டு இந்த சொத்து வரி உயர்வு என்பது முன்னெ டுக்கப்பட்டிருக்க வேண் டும் ஆனால் இது மன்ற கூட்டத்தில் வைக்கப்படா மல் சர்வாதிகாரமான முறையில் அறிவிக்கப் பட்டு இருப்பது என்பது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், பல் வேறு துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய முதல மைச்சர் தனது நேரடி கட் டுப்பாட்டில் இந்தத் துறையை வைத்திருப்ப தால்தான் சிக்கல் எழுகி றது. இதற்கென்று ஒரு அமைச்சரை நியமித்து அவர் மூலம் இத்தகைய நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ள வேண்டும்.

எது எப்படியோ ஆட் சிக்கு வந்த மூன்று மாதங்க ளில் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக் கிறபோது மக்களுக்கான நலத்திட்டங்களை எல் லாம் நிறைவேற்றுவதற்கு வழி இல்லாத ஒரு அரசு மக்கள் மீது மேலும் சுமை களை வைப்பது என்பது ஒரு மோசமான நடைமு றையாக இருக்கும். எனவே சொத்து வரி உயர்வு குறித்து பரிசீலித்து முறையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

**விடுமுறை அறிவிப்பு**

சுதந்திர தினத்தை யொட்டி இன்று (15.08.2026 –சனிக்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (17.08.2026 – திங்கட் கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

தலைமை நிர்வாகி
முரசொலி

### கழக அயலக அணிச் செயலாளர்

# புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லாவின் தாயார் திருமதி நபீசா பீவி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.15–

கழக அயலக அணிச் செயலாளர் முன்னாள் எம்.பி. புதுகை எம்.எம். அப்துல்லாவின் தாயார் திருமதி நபீசா பீவி அவர்கள் நேற்று மறைந்தார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கழக அயலக அணிச் செயலாளரும் நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான சகோதரர் புதுகை எம்.எம்.அப்துல்லா அவர்களின் அன்புத்தாயார் திருமதி நபீசா பீவி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

பாசத்துடன் வளர்த்து, தன்னைச் சான்றோனாக்கி மகிழ்ந்த அன்னையை இழந்து வாடும் தம்பி அப்துல்லா அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கும் அவரது குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### போதைப்பொருளைத் தடுக்காத த.வெ.க. ஆட்சியில்

# கோவை மாவட்டம், 'கொலை மான்செஸ்டராக' மாறிவருகிறது!

## கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை!



கோவை, ஆக. 15-

போதைப்பொருளை தடுக்காத த.வெ.க. ஆட்சி யில் தொழில் துறையில் தென்னிந்தியாவின் மான் செஸ்டர் என்று பெயர் பெற்ற கோவை மாவட்டம் கொலை மான்செஸ்டராக மாறிவருகிறது என்று கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகே சன் அறிக்கை விடுத் துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியில் கல்லூரி மாணவர்களுக்கி டையே ஏற்பட்டு வரும் போதைப்பொருள் கலாச் சாரத்தை தடுப்பதற்காக மாணவர்கள் தங்கும் விடுதி களில் அடிக்கடி சோதனை நடத்தி போதைப் பொருள் புழக்கத்தை தடுத்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வந்ததால் போதைப் பொருள் கலாச்சாரம் கட் டுக்குள் இருந்து வந்தது. அதன் பிறகு, தற்போது அமைந்துள்ள, த.வெ.க. கூட்டணி ஆட்சியில் போதைப் பொருள் ஒழிப் போம் என்று மராத்தான் ஓட்டம், உறுதி மொழி எடுத்தல் போன்ற நிகழ்வு கள் சம்பிரதாயத்திற்காக நடத்திவிட்டு, போதைப் பொருள் ஒழிப்பில் அக் கறை செலுத்தாத, காரணத் தால், நகர பகுதிகளில் நடைபெற்று வந்த கஞ்சா விற்பனை, தற்போது கிரா மங்கள் வரைக்கும் பரவி, இளைஞர்கள் முதல் கல் லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் வரை அனை வரும் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களுக்கு அடிமையாகியுள்ளனர். அத னால் கோவை மாவட்ட பகுதியில் கொலைகள் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகிறது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும், கோவை தெற்கு மாவட்ட பகுதியில், கொடூ ரமான முறையில் 3 படுகொ லைகள் நடந்துள்ளன.

கடந்த ஜூலை மாதம் 28 ஆம் தேதி கிணத்துக்கடவு காமராஜர் நகர் பகுதியில் ஒரு பெண்ணை குத்தி கொலை செய்து அவரது உடலை, தந்தை மகன் இரு வரும் சேர்ந்து கோடங்கிபா ளையம் சாலைக்கு எடுத்து சென்று ஒரு தோட்டத்தில் வைத்து எரித்தனர்.

அதேபோல் கடந்த வாரம் 6 ஆம் தேதியன்று கிணத்துக்கடவு சிக்கலாம் பாளையம் பகுதியில் கஞ்சா மற்றும் மது போதையில் 16 வயது சிறுவன் உள்பட இரண்டு பேர் சேர்ந்து அஷ் வின் என்கிற இளைஞரை கத்தியால் கழுத்தை அறுத்து சுத்தியால் அடித்து கொடூர மான முறையில் கொலை செய்து ரீல்ஸ் வெளியிட் டனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு மலுமிச்சம்பட்டி பகுதியில் கல்லூரி மாணவர் ஒருவரை சக கல்லூரி சீனி யர் மாணவர்கள் அடித்து கொலை செய்துள்ளனர். இந்த கொலைகள் அனைத் தும் கஞ்சா மற்றும் மது போதையில் நடந்துள்ளது. போதைப் பழக்கத்திற்கு அடிமையான மாணவர் கள், சினிமா பாணியில் சர்வ சாதாரணமாக கொலை செய்து வருகின்றனர்.

இதற்கெல்லாம் கார ணம், தற்போது நடை பெற்று வரும், த.வெ.க. கூட்டணி அரசுதான். அவர் கள், போதை பொருள் ஒழிப்பில் முழு கவனம் செலுத்தாததால் இளைஞர் கள் மற்றும் மாணவர்கள் போதைக்கு அடிமையாகி கொலைகாரர்களாக மாறி வருகின்றனர். இதனால் தொழில் துறையில் தென் னிந்தியாவின் மான்செஸ் டர் என்று பெயர் பெற்ற கோவை மாவட்டம், கொலை மான்செஸ்டராக மாறிவருவது மிகுந்த மன வேதனை அளிக்கிறது. எனவே தூக்கத்தில் இருக் கும் த.வெ.க.கூட்டணி அரசு இனிமேலாவது விழித் துக் கொண்டு இளைஞர் கள் மற்றும் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு போதைபொருள் ஒழிப்பில் தீவிரம்காட்ட வேண்டும் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



த.வெ.க. அரசையும், முதல்வர் விஜயையும் விமர்சனம் செய்ததாக நாகை மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வேதாரண்யம் வழக்கறிஞர் அ. பாரிபாலன் மீது பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து சென்னை உயர்நீதிமன்றம் முன் ஜாமின் வழங்கியதையடுத்து வேதாரண்யம் நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றார். உடன் வழக்கறிஞர் மாதவன், மதியழகன், நாகை மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கி.பாபு, சரவணகுமார், நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கோபிகிருஷ்ணா ஆகியோர் உள்ளனர்.